**FIRST INFORMATION REPORT** | **TAMIL NADU POLICE**

**முதல் தகவல் அறிக்கை** | INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093821

1. District : மாவட்டம் Tirunelveli | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year ஆண்டு 2019 | FIR No. மு.த.அ. எண் 05/2019 | Date: நாள் 12.03.2019

2. (i) Act சட்டம்: PC Act 1988 (Act of 16 of Amendment Act, 2018) | Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 11.03.2019 10.00 hrs | Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.03.2019 | Time : நேரம் 08.30 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Palayamkottai Taluk Office 4Km North west

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P.RAVI | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.S.PITHALIS

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 20.06.1971 | (d) Nationality : நாட்டினம் INDIAN | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Business | (g) Address : முகவரி G1, Thiripura Sundari, Apartment, Perumalpuram Palayamkottai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tmt.Vigi, Headquarter Deputy Tahsildar,PalayamkottaiTaluk Office, Tirunelveli District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 12.03.2019-ம் தேதி காலை 08.30 மணிக்கு திரு.ரவி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட தலைமையிடத்து துணை தாசில்தார் திருமதி.விஜி என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 12.03.2019ம் தேதி 09.00 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/2019 u/s 7 of PC Act 1988 (Act of 16 of Amendment Act 2018) என வழக்குப் பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் P.ரவி, 48 S/o S.பிதலிஸ், G1, திருப்புரசுந்தரி அபார்ட்மென்ட், பெருமாள்புரம், பாளையங்கோட்டை தாலுகா, திருநெல்வேலி தாலூகா பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருநெல்வேலி. ஐயா, நான் மேலே கண்ட முகவரியில் குடும்பத்துடன் வாடகைக்கு குடியிருந்து வருகிறேன். நான் அரசு அனுமதியுடன் மண் எடுத்து விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன். நான் பாளையங்கோட்டை தாலுகா சீவலப்பேரி கிராம சர்வே எண் 296, 432(P) மற்றும் 434/2(P)ல் உள்ள 1.81.0 ஹெக்டேர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து அதில் இருந்து மண் எடுக்க திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் ஆணை எண் M2/2203/2017ல் நாள் 27.02.2018ன்படி அனுமதி வாங்கி நடத்தி வருகிறேன். தற்போது பாளையங்கோட்டைக்கு புதிய தாசில்தாராக திரு.கனகராஜ் 08.03.2019ம்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. Ravi 12/3/2019

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 12/3/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12-3-2019.

Name: பெயர் C. SIVASANKARI
Rank: நிலை .....................No. எண் .........
Inspector of Police
VAC. Tirunelveli

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

தேதி பொறுப்பேற்றுள்ளதாக தெரிய வந்ததின்பேரில் 11.03.2019ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் பாளையங்கோட்டை தாலுகா அலுவலகம் சென்று எனக்கு வழங்கப்பட்ட ஆணையை தாசில்தாரிடம் காண்பித்து நான் தொழில் செய்கின்ற விபரத்தை சொன்னேன். அதற்கு அவர் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி.விஜி அவர்களை பார்த்து அவர் சொல்கிறபடி கேட்டுக்கொள்ளுங்கள் என்று சொன்னார். நானும் பாளையங்கோட்டை தாலுகா அலுவலகத்தில் இருந்த தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி.விஜி அவர்களை அவரது அறையில் வைத்து பார்த்து, அவரிடம் மாவட்ட ஆட்சியர் அலுவலக ஆணையை காண்பித்து தொழில் செய்யும் விபரத்தை கூறி தாசில்தாரை பார்த்ததாகவும், அவர் உங்களை பார்க்க சொன்னதாக சொன்னேன். அப்போது தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி.விஜி அவர்கள் தொடந்து மண் குவாரியில் மண் அள்ள வேண்டுமென்றால் மாதா மாதம் ரூ.5,000/- மாமூலாக கொடுங்கள் நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னார். நான் தொழில் டல்லாக உள்ளது மாதாமாதம் கொடுக்கும் அளவிற்கு என்னிடம் பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் மாதாமாதம் ரூ.5,000/- தந்தால்தான் எங்கள் அதிகார எல்லைக்குள் மண் அள்ளவிடுவேன் இல்லையென்றால் நீங்கள் லாரியில் மண் அள்ளிச் செல்லும் போது பிடித்து ஏதாவது ஒரு காரணம் சொல்லி கேஸ் போடுவேன் என்று கண்டிப்பாக சொல்லிவிட்டார். நானும் வேறு வழியில்லாமல் சரி என்று செல்லிவிட்டு வந்து விட்டேன். வீட்டிற்கு வந்து நான் யோசித்து பார்த்தபொழுது சட்டப்படியாக ஆணை பெற்று மண் எடுப்பதற்கு மாமூலாக ரூபாய் 5,000/- கேட்கிறாரே என்று எனது மனம் கஷ்டப்பட்டது. அவருக்கு மாமூலாக பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. அதனால இன்று 12.03.2019 செவ்வாய்கிழமை புகார் மனு கொடுக்கிறேன். தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி.விஜி மாமூலாக கேட்ட ரூ.5,000/- நான் கொண்டு வந்து உள்ளேன். அரசு அனுமதி வழங்கியுள்ள இடத்தில் இருந்து மண் எடுக்க என்னிடம் மாமூல் கேட்ட பாளையங்கோட்டை தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி.விஜி மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் (ரவி) 12.03.2019.

Sir, Received the complaint on 12.03.2019 at 08.30 hrs and conducted confidential enquiry. I registered a case in Tirunelveli V&AC Cr.No.05/2019 u/s 7 of Prevention of Corruption Act, 1988 (Act of 16 Amendment in 2018). sd.C.Sivasankari, Inspector of Police, V&AC, Tirunelveli. 12.03.2019 at 09.00 hrs.

இந்த வழக்கின் அசல் FIR, அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

12/3/19
Insp. V&AC.
Tirunelveli.